எதிர்க்கட்சிகள் புலிகளை எதிர்ப்பது நல்லதல்ல; கடற்றொழிலாளர் பிரச்னை குறித்து கலைஞர் பதில்

அனுவவெளியீட்டுப்பகுதி
யாழ்ப்பாண பொதுநூலகம்

விலை ரூபா 3-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 பங்குனி: 29 தம்மான் பிறை: 14 இதழ்: 58
யாழ்ப்பாணம் புதன்கிழமை 11-04-1990

(சென்னை)

"எதிர்க் கட்சிகள் எல்லாமே விடுதலைப் புலிகளை எதிர்ப்பது போலச் சூழ்நிலைகள் உருவாகுவது நல்லதல்ல" என்று தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதி நேற்று தமிழக சட்டப் பேரவையில் தெரிவித்தார்.

இலங்கைக் கடற் பிராந்தியத்தில் வைத்து, விடுதலைப் புலிகளால் அழைத்துச் செல்லப்பட்டு விடுதலை செய்யப்பட்ட கடற்றொழிலாளர்கள் குறித்து எதிர்க் கட்சிகள் எழுப்பிய கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

விடுதலை செய்யப்பட்டுத் தாயகம் திரும்பிய கடற்றொழிலாளர்களைச் சந்திப்பதற்கு நேரில் சென்ற மீன்வளத்துறை அமைச்சர் திரு சந்திரசேகரன் இன்றுதான் திரும்பியுள்ளார்.

(8ம் பக்கம் பார்க்க

பிரேமா - பிரபா சந்திப்பு; ஹமீத் யாழ். வருகிறார்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரனை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸா சந்திப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளும் பொருட்டு அமைச்சர் ஜனப் ஏ. எல் எஸ். ஹமீத் மிக விரைவில் யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

இதுதொடர்பாக அமைச்சர் ஹமீத் நேற்று விடுதலைப் புலிகள் பிரதிநிதிகளுடன் மேற்

(8ம் பக்கம் பார்க்க)

★ வடக்கு-கிழக்கு பகுதியில் சட்டமும் ஒழுங்கும் சீரடைந்து வருவது குறித்து விடுதலைப்புலிகள்-அரசு திருப்தி!

நேற்று இரு தரப்பினரும் இரண்டு மணி நேரம் சந்திப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்குப் பகுதியில் சட்டமும் ஒழுங்கும் சீரடைந்துவருவது குறித்து நேற்றுக் காலை விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்கத்தின் உயர்மட்டக் குழுவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது திருப்தி தெரிவிக்கப்பட்டது.

நேற்றைய சந்திப்பு சுமார் இரண்டு மணி நேரம் வரை நடைபெற்றது.

இந்தச் சந்திப்பின்போது வடக்கு-கிழக்குப் பகுதிகளின் சட்ட ஒழுங்கு நிலைமை பற்றி நிதியமைச்சரும் வடக்கு-கிழக்கு சமாதானக் குழுவின் தலைவருமான ஜனப் ஏ. எல். எஸ். ஹமீத், விடுதலைப் புலிகள் அமைப்பு உயர் குழுவினரையும், சட்ட அமுலாக்கல் அதிகாரிகளையும் சந்தித்து ஆராய்ந்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

யாழ். செயலகத்தில் பிறப்பு அத்தாட்சிப் பத்திர விண்ணப்ப வேலைகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

யாழ். செயலக மேலதிகப் பெரும்பகுதிப் பதிவாளர் அலுவலகத்தில் பிறப்பு, இறப்பு, விவாக அத்தாட்சிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் வேலை மீண்டும் நேற்று 10-ம் திகதி முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

நேற்றுக்காலை 9 மணியில் இருந்து 11 மணி வரை விண்ணப்பங்கள் ஏற்றுகொள்ளப்பட்டன.

நாநூறு விண்ணப்பங்கள் நேற்று ஏற்றுக்கொள்ளப்பட்டன கடந்த மாதம் 26-ம் திகதி தொடக்கம் விண்ணப்

[8ம் பக்கம் பார்க்க)

சிறிலங்காவுடன்

மோதல் ஏற்படுமென எமது மக்கள் அஞ்சவேண்டியதில்லை - ஆஞ்சநேயர்

(யாழ்ப்பாணம்)

"சிறிலங்காவுடன் மோதல் ஒன்று ஏற்படும் என எமது மக்கள் அஞ்சவேண்டிய அவசியம் இல்லை.

"எமது விடுதலைப் போராட்டம் இன்று பல நெருக்கடிகளைத் தாண்டி, ஒரு பலம் வாய்ந்த ஆன்மீக, அரசியல், இராணுவப் பலம் கொண்ட உறுதிமிக்க சுதந்திர விடுதலைப் போராட்டமாகப் பரிணமை வளர்ச்சிபெற்று, எந்த ஒரு வல்லாதிக்கச் சக்தியாலும், எந்த ஒரு வடிவத்திலும் அழிக்கமுடியாதவகையில் பலம் பெற்றுள்ளது."

நேற்று நல்லூர்க் கந்தசுவாமி கோவில் முன்றலில் அன்னபூபதி நினைவாகத் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியினால் ஒழுங்குசெய்யப்பட்ட உண்ணாவிரதத்தில் பங்குபற்றி உரை

(8-ம் பக்கம் பார்க்க)

மாகாண அமைச்சர் ஆளுநர் சந்திப்பு?

(கொழும்பு)

தற்பொழுது கொழும்பில் தங்கியிருக்கும் வடக்கு கிழக்கு மாகாண அமைச்சர் ஜனப் அபுயூசுப் மேற்படி மாகாண ஆளுநர் நளின் செனவிரத்தினவைச் சந்திக்கவுள்ளார்.

இச்சந்திப்பின்போது திருகோணமலையில் மாகாணசபை கூட்டம் நடத்துவதற்கு பாதுகாப்பு வழங்குமாறு அவர் கேட்பார் எனத் தெரியவருகிறது.

COMMERCIAL BANK
COMMERCIAL BANK

கடந்த காலங்களில் பல இன்னல்களுக்கு மத்தியிலும் மகத்தான சேவையாற்றி மக்கள் மனதில் நிரந்தர இடத்தை வகிக்கும் இலங்கை வர்த்தக வங்கி யாழ். கிளை எமது பாரம்பரியத்தை பேணும் வகையில்

எதிர்வரும் புத்தாண்டு தினத்தன்று
14-04-90 காலை 8 மணி தொடக்கம் 9 மணிவரை
கூடும் சுபவேளையில்
வாடிக்கையாளர்களுக்கு
பல புத்தாண்டுச் சலுகைகளையும்
பரிசுகளையும் வழங்கவிருப்பதை
மகிழ்வுடன் அறியத்தருகிறோம்.
உங்கள் ஆதரவுடன் மென்மேலும்
எமது பணிதொடர
அன்புடன் வருக வருகவென அழைக்கிறது
உங்கள்
இலங்கை வர்த்தக வங்கி

[எ-677] — முகாமையாளர்

மோட்டார் வாகன பரிசோதகர்

நியமிக்கப்படாததால்வாகன பதிவு வேலைகள் பாதிப்பு

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் மோட்டார் போக்குவரத்து உதவி ஆணையாளர் பிரிவில் 1988ம் ஆண்டு ஏப்ரல் 15ம் திகதியிலிருந்து இதுவரை மோட்டார் வாகனப் பரிசோதகர் நியமிக்கப்படவில்லை.

இதுகுறித்து தலைமைப்பீடத்

(8-ம் பக்கம் பார்க்க)

புத்தாண்டுப் பரிசு

(யாழ்ப்பாணம்)

புத்தாண்டு தினத்தையொட்டி இலங்கை வர்த்தக வங்கியில் வாடிக்கையாளர்களுக்குப் புத்தாண்டுச் சலுகைகளும், பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

நீர்ப்பாசனத் திணைக்களம் ஆய்வு:

பலரின் ஓய்வூதியப் பணம் வைப்பு கணக்கிலிருப்பது கண்டுபிடிப்பு!

(மட்டுவில்)

நீர்ப்பாசனத் தலைமையலுவலகத்தில் அண்மையில் நடத்திய ஆய்வுகளின்போது, அங்கு கடமையாற்றிய ஓய்வுபெற்ற, அல்லது இறந்த பல வடக்கு-கிழக்கு அரச ஊழியர்களுக்கும் அல்லது இறந்த அரச ஊழியர்களின் பின்னுரித்தாளர்களுக்கும் உரித்துடைய தான கோரப்படாத பல ஓய்வூதிய வைப்புப் பணம் வைப்புக் கணக்கில் இருப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேலும் இவ்வகையான வைப்புப் பணம் எக்காரணத்திற்காகக் கோரப்படாமல் இருக்கின்றன என்பதைப் பற்றி ஆய்வு செய்தபோது கீழ்க்காணும் தகவல்கள் தெரியவந்துள்ளனவாம்.

ஊழியர்கள் இளைப்பாறும் பொழுது தமது இறுதியான

(8-ம் பக்கம் பார்க்க)

மரண விளம்பரம்

விற்பனைக்கு

பூரண வீரோத்திறனுடைய பம்பாய் வெங்காயவிதை நாசிக் சிகப்பு ர்கம். வியாபாரிகளுக்கு விசேட சலுகை வழங்கப்படும். கிலோ 375-00 படி கிடைக்கும். பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(சி-3720)

தவறிவிட்டது

இல. 661491175 V நா.வசந்தன் நயினுதீவு 6-ம் வட்டாரம் என்பவருடைய அடையாள அட்டை யாழ்ப்பாணம் சாந்தி சினிமா, பஸ் தரிப்பு நிலையத்தில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர் ஈழநாடு காரியாலத்தில் ஒப்படைக்கவும்.
(சி 3739)

தேவை

யாழ். நகரிலுள்ள உல்லாசப் பயணிகள் விடுதி ஒன்றிற்கு Room Boy/Waiter மற்றும் Kitchen Helpers தேவை. முன் அனுபவம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். விளம்பர இல. 682 C/o ஈழநாடு, யாழ்ப்பாணம்.
(ஏ 682)

ராசி பலன்

11- 04- 1990
புதன்கிழமை

மேடம்: மாதாவழித் துன்பம், அதிகாரச் சிறப்பு, பொருள் வரவு சமாதானம்.

இடபம்: அயலவர் பகை, சிறுகாயம், கவனக்குறைவு, பொருட் செலவு.

மிதுனம்: தொழில் பலவிதம், செலவு வாக்குச் சிறப்பு, தேகபீடை.

கடகம்: தனலாபம், இனசனக் கொண்டாட்டம், சத்துரு தொல்லை.

சிங்கம்: அதிக யோசனை. உஷ்ண நோகம், முயற்சியின்மை, பந்துக்களால் தொல்லை.

கன்னி: மறதி, பெரியோர் உதவி, ராஜ பயம், செலவு, பிரயாணக்கவலை.

துலாம்: தலைச்சுற்று, மனச் சஞ்சலம், இலாபக்குறைவு, இனஜன விரோதம்.

விருச்சிகம்: மனச் சஞ்சலம் வைத்தியச் செலவு, சத்துரு தொல்லை, ஆலோசனை.

தனுசு: வீண் கலகம், உஷ்ண வியாதி, நேத்திர பீடை, சமாதானம்.

மகரம்: வீண் பயம், விஷ பீடை, வாகன சுகம், பண வரவு.

கும்பம்: பிறரால் நிந்தை, அற்ப லாபம், காரியத்தடை.

மிதுனம்: செலவு, உடல் இளைப்பு, வீட்டுக்கலகம், பண வரவு.

இ. மகாதேவா

"இளைஞர் மத்தியில் சமய உணர்வை பலப்படுத்த வேண்டும்"

(தென்மராட்சி)

எமது பழம் பெரும் கலைகள் முற்காலத்தில் பாதுகாக்கப் பெற்றுத் தனிச்சிறப்புடன் விளங்கின. அக்கலைகளின் வில்லுப்பாட்டும் ஒன்று அவை தக்க பாதுகாப்பின்றி நாட்டில் ஏற்பட்ட சூழ்நிலைகளால் அழிந்தொழிந்தன. அவற்றுக்குப் புத்துயிர் அளித்து பேண வேண்டியது நமது கடமையாகும்.

மறவனபுலவு முருகன் ஆலயத்தில் நடைபெற்ற அலங்கார உங்சவத்தின்போது சரசாலை இந்து இளைஞர் மன்றத்தினர் நடத்திய வில்லிசையை அறிமுகம் செய்து வைத்துப் பேசும் போது மன்றத் தலைவர் திரு. கு. ஞானசேகரம் இவ்வாறு கூறினார்.

ஆலய இயக்குநர் திரு. க. மனோகரன் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில திரு ஞானசேகரம் மேலும் பேசும் போது "இன்று இளைஞர் மத்தியில் சமய உணர்வைப்பலப் படுத்தவேண்டும் என்றும் இக் நோக்கில் வில்லிசை மூலம் சமய உணர்வை ஏற்படுத்தி வருகிறோம் என்றும் கூறினர்.

றமழான் சிந்தனை

கர்வம் ஒரு கொடிய பாவமாகும்

ஹஜ்ரத்குஸ்ஆ (ரஹ்) அவர்கள் கூறுகிறார்கள்:- "நான், ஹஜ்ரத் அப்துல்லாஹ் இப்னு உமர் (ரலி) அவர்களின் உடலில் தடிப்பான ஆடைகளைக் கண்டு அவர்களிடம் குரலானில் நெய்யப்பட்ட மெல்லிய ஆடைகளை இதோ, நான் கொண்டு வந்துள்ளேன். அவற்றைத் தாங்கள் அணிந்து அக்காட்சியை நான் காண்பதால், என் கண்கள் குளிர்ந்து விடுமென்று வேண்டுகோள் விடுத்தேன். அதற்கு அவர் இதுபோன்ற துணிகளை அணிவதால், என்னில் 'கர்வமும்', 'பெருமையும்' வந்துவிடுமோ? என நான அஞ்சுகிறேன்" என்பதாகக் கூறினர்கள்.

[துல்ருல் மன்தூர்]

"தீபங்களைக் காற்று அணைத்து விடுவதுபோல தவங்களை கர்வம் அழித்துவிடும்"

[நபி ஈஸா [அலை]

வருடாந்த பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட சிக்கன சேமிப்பு கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இம்மாதம் 22ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் யாழ்ப்பாணம் வைத்திஸ்வரா வித்தியாலயத்தில் நடைபெற வுள்ளது.

ஒய்வுபெற்ற சிரேஷ்ட கூட்டுறவு ஆணையாளரும், சமாஜத் தலைவருமான திரு. எஸ். ஞானப்பிரகாசம் தலைமையில் இக்கூட்டம் நடைபெறும்.
(72)

சங்கீதப் போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,
யாழ். மாவட்ட சிக்கன கடனுதவு கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தினுல் சர்வதேச மகளிர் தினவிழாவை யொட்டிச் சங்கீதப் போட்டி யொன்று நடாத்தப்பட்டது.

யாழ். உதவி அரச அதிபர் பிரிவு பிரதேச சபைச் சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கங்கள் இப் போட்டியில் பங்கு பற்றின. சங்கீதப் போட்டியில் செல்வி. க. ஹேமலதா (கொழும்புத்துறை கிழக்கு சிக்கன கடனுதவுக் கூட்டுறவுச் சங்கம்) முதலாம் இடத்தையும். செல்வி சி. ஆன். றுமிஜு (பாஷையூர் சி. க. கூ. சங்கம்) இரண்டாமிடத்தையும், செல்வி எஸ். செல்வி மூன்றுமிடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

விஜேத உடைப் போட்டியில் யாழ். குருநகரைச் சேர்ந்த செல்வி சி. மொறின் முதலாமிடத்தைத் தட்டிக் கொண்டார்.
(54)

நோன்பு தொழுகை நேர அட்டவணை

ஸஹர் முடிவு	4-30
சுபஹ்	4-45
சூரிய உதயம்	6-05
லுஹர்	12-20
அஸர்	3-16
மரிஃப்	6-20
இஷா	7-40

தென்மராட்சி செய்திகள்

மாவின் விலை உயர்ந்துள்ள படியால் தென்மராட்சிப் பகுதிகளில் உள்ள கடைகளில் பலகார வகைகளின் விலையும் திடீரென அதிகரித்துவிட்டன.

பலகார வகைகளின் அளவும். பருமனும் குறைந்துவிட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

0 0

சுற்றுலாச் செயலகம்

சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பிரிவின் பணிகளை இலகுவாக நிறைவேற்றும் பொருட்டு, சுற்றுலாச் செயலகம் ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. திங்கள், வெள்ளி தினங்களில் இயங்கும் இச் சுற்றுலாச் செயலகம் கொடிகாமப் பிரதேசசபை மண்டபத்தில் நடைபெற்றது.

0 0

மக்கள் முன்னணி

சாவகச்சேரி வடக்கில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னனிக்கிளை அமைக்கப்பட்டுள்ளது. இக்கிளை உறுப்பினர்கள் விபரம் வருமாறு: தலைவர்: கே. திருச்சிற்றம்பலம், செயலாளர்: செல்வி வ. குணரத்தினம், பொருளாளர்: இ. திருஞான சம்பந்தர், துணைத்தலைவர்: அ. க. சிவசம்பு துணைச் செயலாளர்; செல்வி அ.யோகேஸ்வரி, மூன்று பேர்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்படனர். இவ் விழாவை சாவகச்சேரி விடுலைப் புலிகளின் மக்கள் முன்னணி உதவி அரசியற் பொறுப்பாளர் திரு. நந்தன் ஆரம்பித்து வைத்தார்.

0 0

ஒன்றியம்

தென்மராட்சி சனசமூக நிலையங்களின் ஒன்றியம் அண்மையில் ஏற்படுத்தப்பட்டுள்ளது. புதிய நிர்வாகிகளாக பின் வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர்: மு. நாகராசா, உப-தலைவர் கா. சின்னத்துரை. செயலாளர்: இ. மு. சந்திரசேகரம், பொருளாளர்; தா. இலங்கநாயகம். ஆறுபேர் நிர்வாக உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

அபிஷேகம்

சாவகச்சேரி சந்திரசேகர வாரிவனநாதர் கோவிலில் பங்குனி உத்தர திருநாளை முன்னிட்டு அபிஷேகமும் திருவாசக முற்றோதலும்இடம் பெற்றது.

அபிஷேகத்தை சிவஸ்ரீ கி சோமசுந்தரக்குருக்கள் நிறைவேற்றிவைத்தார். தென் மராட்சி சைவ மகாசபை, திவ்வியஜீவனி சங்கச்சார்பில் திரு. எஸ். தம்பிராசா தலைமையில் திருவாசக முற்றோதல் நடைபெற்றது.

0 0

பஸ்சேவை

சாவகச்சேரியிலிருந்து கச்சாய் வீதியோரகமாக கொடிகாமத்தை வந்தடையும் இ. போ. ச. பஸ்சேவையை நடைமுறைப் படுத்துமாறு பொதுமக்கள் கேட்டுள்ளனர்.

0 0

ஆத்மாஜோதி வெளியீடு

மட்டுவில் 'ஆத்மஜோதி' வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது. கிளி நொச்சி உதவி அரசாங்க அதிபர் இவ்விழாவில் ஆத்மஜோதியைப் பாராட்டிப் பேகினர்.
(ம)

"அரச அதிகாரிகள் சேவை மனப்பான்மையுடன் கடமையாற்ற வேண்டும்"

- யாழ். அரச அதிபர்

(பண்டத்தரிப்பு)

"அரசாங்க அதிகாரிகளும், ஊழியர்களும் சேவை மனப்பான்மையுடன் தங்கள்கடமைகளை ஆற்றவேண்டும். பொது மக்களுடன் பண்புடன்நடந்து அவர்களின் குறைபாடுகளையும், தேவைகளையும்கவனித்து சேவையாற்ற வேண்டும்".

இவ்வாறு சுமார் ஒன்பது இலட்சம் ரூபா செலவில் புனரமைப்புச் செய்யப்பட்ட சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் பணிமனை கட்டிடத் திறப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றிய யாழ்.மாவட்ட அரசாங்கஅதிபர் திரு. அன்ரன் அல்பிரட் குறிப்பிட்டார்.

சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் திரு க. சிவசம்பு தலைமையில் நேற்று நடைபெற்ற இவ்விழாவில் புதிய கட்டிடத்தை திரு. அன்ரன் அல்பிரட் நாடாவை வெட்டி சம்பிரதாய முறைப்படி திறந்து வைத்தார்.

திரு. அன்ரன் அல்பிரட் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது: "மூன்று வருடங்களுக்கு முன்னர் சேதமாக்கப்பட்ட இக் கட்டிடத்தை சகல வசதிகளையும் கொண்ட நவீனமுறையிலான கட்டிடமாக புனரமைக்கப்பட்டு இன்று திறந்துவைக்கப்படுவதையிட்டு மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். கட்டிடங்களினுல் மட்டும் மக்களுக்கு சிறந்த சேவைகளை வழங்கிவிட முடியாது. மக்களின் நலன்கருதி சேவையாற்றுவதினுல்தான் முழுமையான பயனைப் பெறமுடியும்". என்றார்.

யாழ், அரசாங்க செயலக உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். சண்முகநாதன் உரையாற்றுகையில் "புனரமைப்புப் பணிகளும், புனர்வாழ்வு நடவடிக்கைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுவரும் இக் காலகட்டத்தில் இந்தப் புதிய கட்டிடம் ஊழியர்களுக்கும். பொதுமக்களுக்கும் மிகவும் வசதியாக அமைந்துள்ளது" என்றார்.

வலி.மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கம், கிராமசேவை அலுவலர் திரு. கே. நாராயணன் ஆகியோர் உட்பட பலர் உரையாற்றினர்கள்.

இறுதியில் சண்டிலிப்பாய் கிராமசேவை அலுவலர் திரு. கி. கந்தசாமி நன்றி கூறினர்.
(72)

தொழுநோய்தடுப்பு பயிற்சிகருத்தரங்கு

[பண்டத்தரிப்பு]

தொழுநோய்த் தடுப்பு பற்றிய பயிற்சிக் கருத்தரங்கு ஒன்று கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய இருமாவட்டங்களிலுள்ள வைத்திய அதிகாரிகளுக்காக எதிர்வரும் 15 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யன்று கிளிநொச்சி ககாதார வைத்திய அதிகாரியின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

யாழ். பிரதேச சுகாதார சேவைப் பணிப்பாளர் டாக்டர் என். கனகசபை தலைமையில் நடைபெறவுள்ள இக்கருத்தரங்கில் யாழ். மாவட்ட சுகாதார கல்வி அதிகாரி திரு. கா. வைத்தீஸ்வரன், யாழ். பிரதேச தாய், சேய் நல வைத்திய அதிகாரி டாக்டர் திருமதி எஸ். பொனனம்பலம் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீட சமூக மருத்துவத்துறைத் தலைவர் டாக்டர் எஸ். சிவராசா. யாழ் தொற்றுநோய்த் தடுப்புஅதிகாரி டாக்டர் எஸ். சிவபாதம் ஆகியோர் இதில் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

இதற்கான ஒழுங்குகளை யாழ் மாவட்ட தொழுநோய் தடுப்பு அதிகாரி திரு. எம். குணரத்தினம் செய்துள்ளார்.
[72]

வீதிச்சீர்கேடு

(மருதங்கேணி)

வடமராட்சி கிழக்கிலுள்ள பருத்தித்துறை-ஆழியவளை வீதிச் சீர்கேட்டினுல் அப்பாதையில் பஸ்களும் ஏனைய வாகனங்களும் விபத்துக்குள்ளாகி வருகின்றன.
(53)

சித்திரத் தேர் வெள்ளோட்டம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் மேற்கு அருள்மிகு ஸ்ரீ வாராஹி அம்பாள் ஆலய புதிய சித்திரத் தேர் வெள்ளோட்டம் நாளை 12ம் திகதி வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் ஸ்ரீ ல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய ஸ்வாமிகள், பேராசிரியர் கலாநிதி கா. கைலாசநாதக் குருக்கள், சிவதருமவள்ளல் கனகராசா, திரு.மு.சுப்பிரமணியம் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்த விருக்கிறார்கள்.

இவ்வாலயத்தின் தேர்த் திருவிழா ஏப்ரல் 14ம் திகதி காலை எட்டு மணிக்கு நடைபெறும்.
(152)

பருத்தித்துறை
குகன் ஸ்ரூடியோ
மீண்டும் பழைய இடத்தில்
குகன் ஸ்ரூடியோ
6-ம் திகதி தொடக்கம் பழைய இடத்தில்
(துறைமுகத்திற்கு அருகாமையில்)
இயங்கி வருகின்றதென்பதை வாடிக்கையாளர்களுக்கு அறியத்தருகின்றோம்.
குகன்
பிரதான வீதி,
பருத்தித்துறை.
(எ-680)

★ காஷ்மீர் பணயக் கைதிகள் விவகாரம்:

மரணக் காலக்கெடு இன்று வரை நீடிப்பு

கண்டுபிடிக்கும் பணியில் இராணுவம் தேடுதல்

விளைவுகள் மோசமாகுமென அரசு எச்சரிக்கை

(ஸ்ரீநகர்)

ஜம்மு-காஷ்மீரில் வைத்து கடத்தப்பட்ட பல்கலைக்கழக துணைவேந்தரையும், விரிவுரையாளரையும், கடிகார தொழிற்சாலை அதிபரையும் கொல்லப்போவதாக தீவிரவாதிகள் விடுத்த காலக்கெடுவை இன்று காலைவரை தளர்த்தியுள்ளனர். எனினும் இவர்களை தேடிக்கண்டுபிடிக்கும் முயற்சியில் இராணுவம் பெரும் தேடுதல்வேட்டையில் இறங்கியுள்ளது.

ஜம்மு-காஷ்மீரில் முக்கிய தீவிரவாத தலைவர்கள் மூவரை விடுதலைசெய்யக்கோரியேமேற்படி மூவரையும் தீவிரவாதிகள் பணயக் கைதிகளாக பிடித்துவைத்துள்ளனர். தமது கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் இவர்களை கொல்லப்போவதாகவும் எச்சரித்துள்ளனர்.

ஜம்மு-காஷ்மீர் பல்கலைக்கழக துணைவேந்தரையும், விரிவுரையாளரையும் இந்தியாவில் புகழ்பெற்ற எச்.எம்.ரி. கடிகாரதொழிற்சாலை நிர்வாக அதிபரையும் கடந்த வாரம் தீவிரவாதிகள் பணயக்கைதிகளாக பிடித்தனர்.

தமது அமைப்பைச் சேர்ந்த தலைவர்கள் மூவரை விடுதலை செய்யவேண்டும் என்றும் தவறும் பட்சத்தில் பணயக்கைதிகள் ஒவ்வொருவராக கொல்லப்படுவார்களென்றும் இதற்காக கொடுக்கப்பட்ட கால அவகாசத்தை இன்று காலை வரையும் தளர்த்தியுள்ளனர்

எனினும் இவர்களதுகோரிக்கைக்கு அரசு இதுவரை செவி சாய்க்கவில்லை. மேலும் பணயம் வைக்கப்பட்டவர்களை தேடும் முயற்சியில் ஆயிரக்கணக்கான 'பரா' துருப்புகள் ஈடுபட்டுவருகிறார்கள். இவர்களுக்கு உயிராபத்து ஏற்படும் பட்சத்தில் தீவிரவாதிகள் மோசமான விளைவுகளை எதிர்நோக்கவேண்டியிருக்குமென்றும் எச்சரிக்கப்பட்டுள்ளனர். மேற்படி விவகாரம் அரசுக்கு பெரும் சிக்கல் நிலையை தோற்றுவித்துள்ளதாகவும் தெரியவருகிறது. (பி)

உயிரோடிருக்கும் தொழிலாளிக்கு இறந்துபோனதற்கான நஷ்டஈடு!

(கெய்ரோ)

எகிப்தில் உயிரோடிருக்கும் தொழிலாளி ஒருவருக்கு இறந்து போனதற்கான பெருந்தொகை பணம், நஷ்ட ஈடாகவும், அவரது குடும்பத்திற்கு அனுதாபச் செய்தி ஒன்றும் சவூதி அரேபிய தொழிற்சாலை ஒன்று அனுப்பிவைத்துள்ளது.

இது பற்றி கெய்ரோவை சேர்ந்த பாஹதி அப்துல் அலீஸ் என்பவரது குடும்பத்திற்கு அத்தொழிற்சாலை கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. அக்கடிதத்தில்; சவூதி அரேபியாவில் நடைபெற்ற விபத்தொன்றில் உங்கள் குடும்பத்தலைவர் இறந்து விட்டார். சடலம் கெய்ரோவுக்கு அனுப்பமுடியாதநிலையில் அங்கு புதைக்கப்பட்டுவிட்டது.

அவரது சிறந்த சேவைக்காக எமது நிறுவனம் 6,000 அமெரிக்கன் டொலரை நஷ்டஈடாக வழங்குவதுடன் அவரது திடீர் மறைவால் வாடும் குடும்பத்தவர்களுக்கு அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதாக குறிப்பிட்டிருந்தது.

மேற்படி கடிதம் ஒழுங்கான விலாசத்திற்கு கெய்ரோவிற்கு வந்துள்ளது. இக்கடிதத்தை பெற்றுக்கொண்டது மேற்படி சவூதியில் விபத்தில் கொலலபட்டதாக கூறப்பட்ட பாஹதி அப்துல் அலீசேயாகும்.

இதுபற்றி அவர் பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார். கடந்த சில வருடத்திற்கு முன் தனது 'பாஸ்போட்'களவுபோனதுபற்றியும் அவர் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார். உண்மையாக சவூதியில் விபத்தில் இறந்து போனவர் யாரென தற்போது பொலிஸார் விசாரணையில் ஈடுபட்டு வருகிறார்கள். (பி)

இந்தியாவில் அகதி முகாம்களில் 5000 பேர் பட்டினியால் பலி

பத்திரிகை தகவல்

(டாக்கா)

இந்தியாவிலுள்ள அகதிகள் முகாம்களில் சுமார் 5000பங்களாதேஷ் அகதிகள் பட்டினியாலும், பல்வகை தொற்று நோய்களாலும் மரணமடைந்துள்ளதாக பங்களாதேஷிலிருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்று தெரிவித்துள்ளது.

'தடைனிக் ஜனதா' என்ற இப்பத்திரிகை மேலும் தகவல் தெரிவிக்கையில், பங்களாதேஷில் சிட்டஹொங் மலைப் பகுதியில் இடம்பெற்றுவரும் தீவிரவாதிகளின் போராட்டத்தால் லட்சக்கணக்கான மக்கள் இந்தியாவிற்கு அகதிகளாக சென்றுள்ளனர்.

இவர்களை பராமரிக்க போதியளவு முகாம்களும் வசதிகளும் இல்லாததால் சுமார் 5000 பேர் பட்டினியாலும், பல்வேறுவகை தொற்றுநோய்களாலும் மரணமடைந்துள்ளனர். மேலும் ஆயிரக்கணக்கானவர்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இப்பகுதிகளில் போதிய உணவு வசதிகளும் மருத்துவ வசதிகளும் இல்லாதுள்ளதாகவும் தற்போதைய சூழ்நிலையில் அகதிகள் உடனடியாக பங்களாதேஷிற்கு திரும்ப முடியாதுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளது. (பி)

ரஷ்யாவில் மகாபாரதம்

(மாஸ்கோ)

''மகாபாரதம்'' திரைப்படம் ரஷ்யாவில் விரைவில் திரையிடப்படவுள்ளது.

இத் தகவலை மேற்படி படத்தின் இயக்குநர்களில் ஒருவரான பீட்டர் புரூக் மாஸ்கோவில் வெளியிட்டுள்ளார். தற்சமயம் இவர் மாஸ்கோவில் தங்கியிருந்து படம் திரையிடப்படுவதற்கான ஏற்பாடுகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளார்.

உலகிலேயே மிக நீண்ட காவியமாகத் திகழும் ''மகாபாரதம்'' விவிலிய நூலைவிட 15 மடங்கு பெரியதாகும்.

பல்வேறு நாட்டுக் கலைஞர்கள் பங்கு கொள்ளும் இத்திரைப்படம் ரஷ்யாவில் பெரும் வரவேற்பைப்பெறும் என நம்பப்படுகிறது. [க]

சோவியத்தில் பெப்ஸி-கோலா விற்பனைக்கு பல லட்சம் டாலரில் ஒப்பந்தம்

(மாஸ்கோ)

சோவியத்யூனியனில்பெப்ஸி கோலா'குளிர்பானத்தை விற்பனை செய்யும் அனுமதியை அமெரிக்க நிறுவனம் பலலட்சம் டொலருக்கு ஒப்பந்தம் செய்துள்ளது. இதற்கான ஒப்பந்தக் கைச்சாத்து நேற்று முன்தினம் இடம்பெற்றது.

அமெரிக்க நிறுவனங்களின் தயாரிப்பான கொக்கோ-கோலா, பெப்ஸி-கோலாவை இதுகாலவரை சோவியத்யூனியனில் விற்பனை செய்ய பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுவந்தபோதும் தற்போதே இதற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சோவியத்தில் பெப்ஸி கோலா மூலம் அமெரிக்க நிறுவனத்திற்கு வருடம் தோறும் பல கோடி டாலர் லாபம் கிடைக்குமென்று தெரிவிக்கப்படுகிறது. பெப்ஸிகோலாவின் முதல் தொகுதி தற்போது மாஸ்கோவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. (பி)

இன்று காணிக்கச்சேரி

(தென்மராட்சி)

கைதடி உட்பட தென்மராட்சி மேற்குப் பகுதிக்கான காணிக்கச்சேரி இன்று 11ம் திகதி புதன்கிழமை சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறும்.

மீசாலை வடக்கு உட்பட தென்மராட்சி கிழக்குப் பகுதிக்கான காணிக்கச்சேரி இம்மாதம் 16ம் திகதி திங்கட்கிழமை கொடிகாமத்திலுள்ள உதவிஅரசாங்க அதிபர் சுற்றுலா நிலையத்திலும் நடைபெறும்.

தினமும் காலை 9 மணிமுதல் 4 மணிவரை நடைபெறும் காணிக்கு விண்ணப்பித்தவர்கள் உறுதிமுத்திரை, கூப்பன் அடையாள அட்டை, ஜனசக்தி உரித்தாவணங்களுடன் சமுகமளிக்குமாறு கேட்கப்படுகின்றனர்.

"போராளிகள் தியாகம் வரலாற்றுடன் இணைந்தவை'

(நெடுந்தீவு)

தமிழ்மக்கள் தமது சொந்த மண்ணில் தன்மானத்துடனும் கண்ணியத்துடனும் வாழவேண்டும் என்பதற்காகவே தம்மை அர்ப்பணித்துகொண்டவர்கள் விடுதலைப்புலிகள். விடுதலைக்காக களப்பலியான போராளிகளின் தியாகம் வரலாற்றுடன் இணைந்தவை. எமது மக்களுக்காகப் போராடும் நாம், எமது இலட்சியம் வெற்றிபெற மக்களின் ஆதரவும் ஒத்துழைப்புமே காரணம். இவை தொடர்ந்து எமக்குக் கிடைக்க வேண்டும்.''

இவ்வாறு நேற்றுமுன்தினம் விடுதலைப் போரில் பலியாகிய குட்டிக்கண்ணன் மற்றும் போராளிகளின் நினைவுஸ்தூபி, சிறுவர்பூங்கா என்பவற்றிற்கான அடிக்கல்லை நாட்டிவைத்து உரையாற்றும்போது தீவுப்பகுதி விடுதலைப் புலிகளின் அரசியற் பொறுப்பாளர் திரு. காஸ்ரோ உரையாற்றும்போது தெரிவித்தார்.

நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலை பொறுப்பதிகாரி

(6ம் பக்கம் பார்க்க)

செயலாளராகத் தெரிவு

(சென்னை)

சென்னை பத்திரிகையாளர் சங்கத்தின் இணைச்செயலாளராக திரு. எஸ் எஸ். கார்மேகம் தெரிவுசெய்யப்பட்டுள்ளார். தற்பொழுது 'தினமணி' ஆசிரிய பீடத்தில் கடமைபுரிகின்றார்.

இலங்கையில் பிறந்துவளர்ந்தவரான இவர் வீரகேசரி ஆசிரிய பகுதியில் நீண்டநாட்கள் பணிபுரிந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

இந்திய கடற்றொழிலாளர் விவகாரம்

"இலங்கை கடற்பிரதேசத்துள் அத்துமீறவேண்டாம்" அமைச்சர் அறிவுரை

(சென்னை)

இலங்கைக் கடற் பிரதேசத்துள் அத்துமீறி மீன் பிடிக்க வேண்டாமென, இந்திய கடற்றொழிலாளர்களை தமிழக மீன்வளத்துறை அமைச்சர் திரு சந்திரசேகரன் கேட்டுள்ளார்.

அண்மையில் இலங்கைக் கடற் பிரதேசத்துள் வைத்து விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டவர்கள், தமது தவறை ஒப்புக்கொண்டபோதே அமைச்சர் திரு சந்திரசேகரன் மேற்படி அறிவுறுத்தலை அவர்களிடம் தெரிவித்தார்.

இந்தியக் கடற் பிரதேசத்திற்குள் மாத்திரம் மீன்பிடிக்குமாறும், இதனை அத்துமீறவேண்டாமெனவும் அமைச்சர் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் தமிழக சட்டசபையில் இது தொடர்பாக விவாதம் நடைபெற்றது. அண்மையில் தமிழக கடற்றொழிலாளர்கள் விடுதலைப் புலிகளால் கைதுசெய்யப்பட்டு விடுவிக்கப்பட்டது பற்றி, விடுதலையான கடற்றொழிலாளர்களை விசாரித்து அறியுமாறும் தமிழகமுதல்வர் திரு. கருணாநிதி உத்தரவிட்டுள்ளார். (பி)

மணிவாக்கு

அறங்களை மேற்கொண்டு ஒழுகுபவன் இம்மையில் புகழையும் மறுமையில் சுகத்தையும் பெறுவான்.

—மநுதர்மநீதி

நமது நோக்கு

வெண்ணை திரண்டு வரும்போது....!

தாழியை உடைப்பவர் யார்? இது கேட்கவேண்டிய கேள்வி!

ஒவ்வொரு முறையும் தமிழர்களுக்கான உரிமைகள் பற்றிப் பேச்சுவார்த்தைகள் நடைபெறும்போது குழப்பியடித்து விடுவது, ஒரு சாதாரண விஷயமாகி விட்டது.

பாராளுமன்றத்தில் ஜனாதிபதி உரையாற்றியபோது முக்கிய எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்துள்ளன. பொதுக் கூட்டம் ஒன்றை நடாத்தியுள்ளன. வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, ஜனநாயகப்பாதுகாப்பு, மனிதஉரிமைகள் ஆகியவற்றை முக்கிய கருவிகளாகக் கொண்டு அரசுக் கெதிரான பிரசாரத்தை எதிர்க்கட்சிகள் முடுக்கிவிட்டுள்ளன.

இவற்றை எல்லாம் எதிர்பார்த்து, ஜனாதிபதி தமது உரையைத் திட்டமிட்டிருந்திருக்கிறார். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பதற்கானகாரணங்களை ஆராய்ந்திருக்கிறார் அதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப் படுவதாக ஜனாதிபதி உறுதி கூறியிருக்கிறார்.

1989ல் 2..5 சதவீதமாக இருந்த இலங்கையின் உற்பத்தி 1990ல் 5 முதல் 6 சதவீதமாக உயரலாம் என ஜனாதிபதி நம்பிக்கை தெரிவித்திருக்கிறார் தற்போதுள்ள அமைதிச் சூழ்நிலை தொடர்ந்தாலே இது சாத்தியமாகும்.

உதவி வழங்கும் நாடுகள் எமது நாட்டின் மீது நம்பிக்கை வைத்துள்ளன; 785 மில்லியன் டொலரை உதவியுள்ளன. சர்வதேச நிதியம் 85 மில்லியன் டொலரை உதவி செய்து, சென்மதி நிலுவைப் பிரச்சனைகளை ஓரளவுக்குத் தீர்க்க முன்வந்துள்ளது.

இதேபோல, உலகவங்கியும் 90 மில்லியன் டொலரை உதவ முன்வந்திருக்கின்றது.

ஆசிய வங்கி 80 மில்லியன் டொலரைத் தருவதன் மூலம் விவசாயத்திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்த இருக்கின்றது.

இவற்றையெல்லாம் ஜனாதிபதி எடுத்துக்காட்டி, மக்களிடையே எதிர்காலம் பற்றிய நம்பிக்கை ஒளி ஊட்டியிருக்கிறார்; உறுதிபட நிற்கிறார்.

வெண்ணை இவ்வாறு திரண்டு வருகின்றது. திரண்டு வரும் வெண்ணையைப் பங்கிடுவதிற் பிரச்சனைப்படுவ தென்றாலும் பரவாயில்லை.

தாழியைப் போட்டுடைக்கச் சதிநடப்பதாகப்புகார் கூறப்படுகின்றது.

பேச்சுவார்த்தைகளைக் குழப்ப எதிர்க் கட்சிகள் முயற்சி எடுப்பதாகப் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன குற்றஞ் சாட்டியிருக்கிறார்.

பாராளுமன்றத்திலேயே இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்திருக்கிறார் அமைச்சர். சுதந்திரக்கட்சியினர் எழுப்பிய வினாக்களுக்குப் பதிலளிக்கவே இவ்வாறு கூறியுள்ளார்.

இம்முறை தாழி உடைந்தால்.....?

நாட்டுக்கு மீட்சியே இல்லை என்பதைச்சுட்டுக்காட்ட விரும்புகிறோம்!

தவக்கால நற்சிந்தனை

எமது சுயநலம்

"மாசற்ற இரத்தத்தை காட்டி கொடுத்துவிட்டேன்" யூதாசின் மனச்சாட்சி உறுத்தியது. கூலிக்கு கொலையாளியாக மாறி காட்டிக்கொடுக்க ஊதியம்பெற்றவன் உண்மையை உணர்ந்து தன் மனட்சாட்சியின்முன் குற்வாளியாகி வருந்தும் வார்த்தைகள் அவனது உள்ளத்தில் இருந்து அழுகிறது.

உணர்ந்தவன் அந்த 30 வெள்ளிப் பணத்தையே அந்த கொடியவர்களிடம் ஒப்படைக்கிறான். "இனி அந்தக் காசை பெட்டியில்கூட போட வேண்டாம்" ஏனெனில் இவை 'இரத்தத்தின் விலை' என்கிறார்கள் அந்தக் கொடிய வர்கள். அப்பணத்தைக் கொண்டே "இரத்த நிலம்" வாங்கப்பட்டது. இவை சரித்திரம் கூறும் உண்மை. யூதாஸ் தன்குற்றத்தை உணர்ந்தான். அவன் தனது குற்றத்தை உணர்ந்தாலும் அவனது மனச்சாட்சி அவனைவிட வில்லை. அதனால் அவனே தன்னை அழித்துக் கொண்டு விட்டான்.

உண்மையில் நாம் எத்தனை குற்றங்களை எமது சுயநலத்திற்காகச் செய்துவருகின்றோம். எமது மனச்சாட்சி எம்மை உறுத்தவில்லையா? உறுத்தினால் திருந்த முற்பட்டோமா? இவைமூலம் நாம்செய்த தவற்றுக்காக வருந்துவோம். குற்றத்தை ஒப்புக் கொள்வோம. எம்மால் தண்டிக்கப்பட்டவர்களிடத்தே மன்னிப்புக் கோருவோம். அதன்மூலம் எமது குறைகளைக் களைந்து ஏற்றுக் கொள்வோமா? மற்றவர்கள் வாழ்வையும் ஏற்றுக் கொள்ளும் மனத்தால் வாழவைப் போமா! வாழப் பிறந்தவர்களுக்கு வழிகாட்டிகளாக எமது குறைகளை நாம் ஏற்றுவாழ் வோமா?

அருட். சகோ.

பி. இக்நேசியேஸ் மாக்.

C. M. S. F.

முச்சந்தியில் மூன்று பேர்

இப்பதான் கஸ்தூரியார் ரோட்டிலை கொஞ்சம் பெருமூச்சு விடுகிறோம்!

யாழ். மாநகரசபை யாழ்ப்பாண நகரசபை எல்லைக்குள் வீதி ஒழுங்குமுறைகளை கண்காணித்து வருகின்றது. இதுபற்றி மூவரிடம் அபிப்பிராயம் கேட்டோம். முதலில் மினிபஸ் சாரதி சந்திரசேகரம் சொன்னார்:

"றைவிங் தொழிலெண்டால் கடவுளுக்கு ஒரு தொண்டு செய்கிற மாதிரி. இருபது முப்பது சனங்களின் உயிர் எங்கட கையில... இதைப்பற்றி யோசனையில்லாமல் றைவிங் தொழிலுக்கு வந்தவங்களாலதான் இப்ப அடிக்கடி அக்சிடென்ற் வருகுது.

நீங்கள் நம்பிலுல் தம்புங்கள் நான் வானில் ஏறி காலமையில குந்தும்போது சாமிப் படத்துக்கு பூவைச்சு... செயரிங்கை கும்பிட்டபிறகுதான் வான் எடுப்பன். இப்படி நாம செய்கிற தொழிலின் மகத்துவத்தை புரியாதவங்களால் நம்ம சனத்துக்கு அடிக்கடி கரைச்சல்... என்ன செய்வம் பாவங்கள் சனங்கள்.

முனிசிப்பல் வீதி ஒழுங்குமுறை கொண்டு வந்ததால, அரைவாசி அக்சிடென்ற் குறைஞ்சுபோச்சு... 'வன் வேயில்' இப்ப போகிறதுதான் காரணம். கண்டபடி ஒடுறவங்களால மாசம் கொஞ்சச் சனம் தப்பிப் பிழைச்சுக்கொள்கிறது என்ற உண்மையை சொல்லத்தான் வேணும்.

என்னத்தைச் சொன்னாலும் நம்மட சனங்கள் இன்னும் திருந்தவில்லை... இப்பவும் நடு ரோட்டால போகுதுகள்... பொம்பிளைப்பிள்ளைகளால ஆகக் கஷ்டம்... மூன்றுபேர் ஒரே நேராக சைக்கிளில் போகுதுகள். அதுகளுக்கு இதுகள் விளங்குதில்லை பாருங்கள். இதுக்கு கொழும்பில செய்தது மாதிரி கோடடிச்சு அந்தப் பேமன்ட்டுக்குள்ளால போகப் பண்ணவேணும் கடக்கயிக்க கடக்கிற நிலையங்களும் ரோட்டில குறிப்பிட்டா... உண்மையிலேயே முனிசிப்பல் ஒரு பெருந்தொண்டு செய்கிறதாக சனங்கள் நினைக்கும்."

வீதி ஒழுங்கு முறைகளை கண்காணித்துக் கொள்ளும் ஒருவரை அணுகிக் கேட்டோம்.

"பார்த்தீங்களா அவரை அந்த ரோட்டால போகக் கூடாது. நாங்க என்னத்துக்கு நிக்கிறம் என்று அவருக்கு கவலையில்லை. இப்படியான ஆட்களை ஒரு நாளைக்கு எத்தனை பேரைச் சந்திப்பம். இந்த நடுவெய்யிலுக்கு நிக்கிறது கஷ்டமாகத்தான் இருக்கு. ஒருநல்ல தொழிலைச் செய்கிறம் என்பதில் ஒரு மன திருப்தி.

ஆறு மணித்தியாலம் தான் எங்களுக்குவேலை. எல்லாருக்கும் இந்த 'சிஸ்ரத்தை' பழக்கி விட்டம் என்றால் எங்களுக்கு வேலை கொஞ்சம் சுகமாக இருக்கும். அதுவரைக்கும் இது கஷ்டமான தொழில் தான். எத்தனை பேரைச் சரிக்கட்ட வேணும்."

வழியில் குடையும் கையுமாகப்போன கணபதிப்பிள்ளை அண்ணரைக் கூப்பிட்டுக்கேட்டோம்:

"இதெல்லாம் ஏன் தம்பி பேப்பரில போடவேணும். இந்த கஸ்தூரியார் ரோட்டிலை இப்பதான் கொஞ்சம் மூச்சுவிடக்கூடியதாக இருக்கு. முந்தியெண்டால் இந்த கஸ்தூரியார் ரோட்டில அந்தப் பக்கத்தால ஒரு லொறி... இந்தப் பகக்கத்தால ஒரு பஸ்... நடுவில என்னைபோல பொதுசனம் பட்ட பாடுகள்... முனிசிப்பல் நல்லதைச் செய்திருக்குது... கொஞ்சம் கஸ்தூரியார் ரோட்டால இந்த மோட்டச் சைக்கிளையும் ஓட்டாமல் நிப்பாட்டினால் கொஞ்சம் நல்லம் பாருங்கோ... மினிவான் வாற வழிகளிலபோனால் எங்க

(8ம் பக்கம் பார்க்க)

கிராம சேவையாளர்கள்

மக்கள் நிலையை உணரவேண்டும்

சென்ற 6-4-1990 ஈழநாடு பத்திரிகையின் மக்கள் கருத்துப் பகுதியில் வெளிவந்த "எமது நிலையைமக்கள் உணரவேண்டும்" என்ற விடயம் தொடர்பாக,

நாட்டின் ஏனைய அரச ஊழியர்களைப் போன்றே கிராம சேவையாளர்களும் உள்ளனர். ஆனால் அவர்களுடைய கடமைகளும் பொறுப்புகளும் முற்றிலும் மாறுபட்டவை. பொது மக்களுக்காக அரசாங்கம் அளிக்கும் சேவைகள்,

மக்கள் கருத்து

உதவிகள் எல்லாம் கிராம சேவையாளர் மூலமாகவே அவர்களுக்குச் சென்றடைகின்றன. அரசாங்க இயந்திரத்தில் மக்களுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருக்கும் முதன்மை அரச ஊழியன் கிராம சேவையாளன். மக்களுக்கு அன்றாடம் ஏற்படும் நன்மை, தீமை யாவற்றிற்கும் அவர்கள் முதன் முதலில் சந்திக்க வேண்டிய அரச உத்தியோகத்தர் கிராம சேவையாளனே. எனவே. பொது மக்களுக்கு சரியான வழிமுறைகளைக்காட்டி அரசு வழங்கும் உதவிகளை உரியவர்களுக்குப் போய்ச் சேரவேண்டியதை உறுதிப்படுத்தும் அரிய சேவையைச் செய்வது கிராம சேவையாளனே.

அண்மைக்காலங்களில் அரசு வழங்கிய நிவாரண விடயத்தில் உண்மையாகப் பாதிக்கப்பட்ட பலருக்கு மீளக் குடியமர்வும் பணமோ, அன்றி மற்றும் நிவாரணங்களோ இன்று வரை கிடைக்கவில்லையென்றால் அதற்கு ஆரம்ப கடமைகளை மேற்கொண்ட கிராம சேவையாளரது சிபார்சின் பேரில் மேலதிகாரிகள் வழங்குகிறார்கள். உண்மை நிலையை கிராம சேவையாளர் அறியாததால் சில தவறுகள் ஏற்படுகின்றன. இவை மேலதிகாரிகளின் தவறு என்று சொல்லிவிடல் பொருந்தாது.

கிராம சேவையாளரது சேவைகள் நாள் முழுவதும் மக்களுக்கு உரியது என்பது சேவையில் சேரும் போதே அவர்கள் அறிந்த விடயம் இது ஒன்றும் புதிதல்ல. கிராம சேவையாளர் தமது குறைபாடுகளைத் தீர்த்துக்கொள்வதற்கு சம்பந்தப்பட்ட மேலதிகாரிகளுடனல்லவா தொடர்பு கொள்ளவேண்டும்.

தங்கள் பகுதியில் காரியாலயம் திறப்பது பற்றியும்அதற்கு வழங்கப்படும். வாடகை பற்றியும் குறிப்பிடப்பட்டுள்ளது. கிராமப் புறங்களிலே தமது பிரிவில் காரியாலயம் வைப்பதற்கு இடம் இணுமாகவே தர முன் வந்த சந்தர்ப்பங்களை மக்கள் அறிவர். தளபாடங்களும் அவ்வாறே. நிலைமை இப்படி இருக்க ரூ. 30/- மட்டும் தரப்படுகிறது என்பது விளங்கவில்லை. தமது பகுதியில் கிராம சேவையாளர் ஒருவர் (தங்குவதற்கல்ல) காரியாலயம் வைப்பதற்கு இடம் எடுக்க முடியவில்லை என்ற செய்தி எமக்குப் புரியாத புதிராக உள்ளது.

இனி கடமைகளில் வாக்காளர் இடாப்பு புதுப்பித்தல் என்ற விடயத்தை எடுத்துக் கொண்டால் வருடாவருடம் புதுப்பிக்கப்படும் வாக்காளர் இடாப்புப் படிவங்களைக்கண்ணால் காணுத பிரதம குடியிருப்பாளர்களையும், அந்தப்பத்திரத்தில் கையொப்பமிடாத பிரதம குடியிருப்பாளர்களையும் கொண்ட கிராமசேவையாளர் பிரிவுகள் இன்றும் உண்டு.

அடுத்து உணவு முத்திரை வழங்கும் பொறுப்பு. இது யார் யாருக்கு வழங்கப்படுகிறது என்பது ஒரு பிரச்சனைக்குரிய விடயம்.

இப்படி, மக்களுக்காகச் சேவையாற்றம் பொறுப்பேற்றுக்கொண்ட கிராமசேவையாளர்களது செயற்திறன், செயற்பாடுகளை மக்கள் நன்கு அறிவர். மக்கள் மத்தியில் சேவையாற்றப் புறப்படும் கிராம சேவைவாளர் தாம் நான்கு பக்கங்களிலுலும் என்னேரமும் கவனிக்கப்படுகிறார் என்பதை மறந்து போகக் கூடாது.

மேலும், கிராம சேவையாளரின்மக்கள் சேவைகடவுளுக்குச் செய்யும் சேவையென மதித்து கடமை புரிவது மிகவும் அவசியம். தாம் கடமை புரியும் பகுதியில் கிராம சேவையாயாளர் வசிக்க வேண்டும். அப்பகுதி மக்களின் குடும்ப.

(6ம் பக்கம் பார்க்க)

பலதும் பத்தும்

வெள்ளிவிழா

ஒருநதியின் நீர் யாருக்குச் சொந்தம்! உற்பத்தியாகும் இடத்தினருக்கா? ஊடாகச் செல்லும் இடத்தினருக்கா?

கர்நாடகத்தில் உற்பத்தியாகும் காவிரியாறு தமிழ் நாட்டுக்கூடாகச் செல்கிறது. கர்நாடக மாநிலத்திலே அணைகட்டி நீரைத் தேக்கி வைத்திருக்கிறார்கள், அதனாலே தமிழ் நாட்டுக்கு நீர் பற்றாக்குறை.

நீரைத்தரலாம், அதற்குப் பதிலாக மின்சாரம் தரவேண்டும் என 'அடம்' பிடிக்கிறார்களாம் கர்நாடகக்காரர்கள்.

இதுபற்றிய பேச்சுவார்த்தைகள் 22 வருடங்களாக 'இழுபறி நிலையில்!'

அண்மையில் மீண்டும் பேச்சு வார்த்தை நடைபெற்றது. தமிழக முதல்வர் பங்குபற்றி 25-வது தடவையாக நடைபெறும் பேச்சு வார்த்தையாவது வெற்றி தரவேண்டுமென்று 'நாசூக்காகக்' கூறியிருக்கிறார். எப்படி?

வெள்ளிவிழாக் காணும் பேச்சுவார்த்தை... என்றிருக்கிறார், தமக்கே உரித்தான நகைச்சுவைப் பாணியில்!

வாணி

மக்கள் வங்கி

சித்திரை வருடப்பிறப்பு - கைவிசேட நிகழ்ச்சி

வடபகுதியில் இயங்கும் 16 மக்கள் வங்கிக் கிளைகளிலும் இம்மாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை காலை 9.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை மேற்படி நிகழ்ச்சி இடம்பெறும். அன்றைய தினம் வங்கியில் வைப்புச் செய்யும் எமது வாடிக்கையாளர்களுக்கும் புதிய வாடிக்கையாளர்களுக்கும் வைபவரீதியாகக் கிளை முகாமையாளரினால் கைவிசேடம் வழங்கப்படும்.

எமது வாடிக்கையாளர்கள் ஆதரவாளர்கள் அனைவரையும் இந்நிகழ்ச்சியில் பங்குகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகின்றோம்.

வாடிக்கையாளர்களுக்கு ஓர் நற்செய்தி

புதுவருடச் சலுகை

மக்கள் வங்கி வழங்கும் 2 வருட கைமாற்றக்கூடிய சேமிப்பு சான்றிதழ்களை இம்மாதம் 14-ம் திகதிவரை 3 வீத வரிவிதியை செலுத்தாமல் வாடிக்கையாளர்கள் மக்கள் வங்கிக் கிளைகளில் பெற்றுக்கொள்ளலாம்.

கைமாற்றக்கூடிய சேமிப்புச் சான்றிதழ்களின் நடைமுறை வட்டி வீதம் 16.3ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது.

ரூ. 8,600/- 12 மாதங்களுக்கு முதலீட்டு முதிர்ச்சியின்போது ரூ. 10,000/-ஐ பெற்றுக்கொள்ள முடியும்.

மக்கள் வங்கி,
பிராந்தியத் தலைமையகம்,
யாழ்ப்பாணம்.

பிராந்திய முகாமையாளர்.

(எ 684)

வனமரக் கன்றுகள் உற்பத்திசெய்ய ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வனபரிபாலனத் திணைக்களத்தினால் யாழ்ப்பாணத்தில் மீண்டும் வனநாற்று மேடைகள் அடுத்து மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளன.

ஒருலட்சம் வனமரக்கன்றுகளை உற்பத்தி செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வன விஸ்தரிப்பு திட்டத்தின்கீழ் பாடசாலைகள், அரச நிறுவனங்கள் அரச சார்பற்ற நிறுவனங்கள் என்பவற்றிக்கு விநியோகம் செய்வதற்கென நாற்று மேடைகளில் வன மரக் கன்றுகள் உற்பத்தி செய்யப்பட்டன.

கடந்த இருவருடங்களுக்கு மேலாக வன இலாகாவுக்கு உரிய கட்டிடத்தில் இந்திய ராணுவமுகாம் அமைந்திருந்த காரணத்தால் 75000 நாற்று மேடை மரக்கன்றுகள் அழிந்து போய்விட்டன.

இதன் மூலம் ஒரு லட்சத்தி ஐம்பதினாயிரம் ரூபா நஷ்டம் ஏற்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. (153)

சென். ஜோன் அம்புலன்ஸ் முதலுதவி பிரிவுக்குபாராட்டு

(பண்டத்தரிப்பு)

புதூர் நாகதம்பிரான் ஆலய வருடாந்த பொங்கல் உற்சவத்தின்போது திரண்டிருந்த பக்தர்களின் நலன் கருதி சென். ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படையினர் முதலுதவிச் சிகிச்சை முகாம் நிறுவி மேற்கொண்ட சேவைகளுக்காக கிளிநொச்சி மேலதிக அரசாங்க அதிபர் திரு. எஸ். அமிர்தலிங்கம் படையின் வடமாகாண ஆலோசனையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பிக்கு அனுப்பி வைத்துள்ள கடிதமொன்றில் பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி பொறுப்பாளர் திரு. எஸ். வி. சிறிதரன் தலைமையில் 25 தொண்டர்களைக் கொண்ட படைப்பிரிவு ஆலயத்தில் முகாமிட்டு முதலுதவிச்சிகிச்சையுடன் பாதுகாப்பு வீதி ஒழுங்கு ஆகிய கடமைகளையும்மேற்கொண்டமைக்கு இக்கடிதத்தில் பாராட்டும், நன்றியும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (72)

"மாணவர் முன்னேற்றத்திற்கு லயன்ஸ் கழகம் உதவும்"

(உடுவில்)

இளம் தலைமுறையினருக்கு விளையாட்டுக்கள் அவசியமாகின்றன. எந்த சமய, மொழி, இன மக்களாயினும் விளையாட்டுக்கள் மூலம் தேகசுகத்தையும், ஆரோக்கிய வாழ்வையும் பெற்றுக்கொள்ள முடியும்.

லயன்ஸ் கழக மாவட்ட ஆணையாளர் திரு பிறேமச்சந்திர பத்திரனா மானிப்பாய் இந்துக்கல்லூரியில் விளையாட்டரங்குப் புள்ளிப்பலகையைத் திறந்துவைத்துப் பேசுகையில் இவ்வாறு கூறினார்.

மானிப்பாய் லயன்ஸ் கழக ஆதரவில் ரூபா 20,000 செலவில் இப்புள்ளிப்பலகை அமைக்கப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி உப அதிபர் திரு இராமலிங்கம் தலைமையில் திறப்பு விழா நடைபெற்றது.

லயன் திரு. எஸ். பத்மநாதன் லயன்ஸ் கழகத்தின் சேவைகளை எடுத்துக்கூறி பாடசாலை மாணவரின் முன்னேற்றத்திற்காக லயன்ஸ் கழகம் மேலும் பல உதவிகளைச் செய்யும் எனக் கூறினார். (109)

யாழ்.நகரில் புத்தாண்டு விழா

(பண்டத்தரிப்பு)

யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தமிழ் புதுவருடப் பிறப்பை முன்னிட்டு நடாத்தப்படும் புத்தாண்டு விழா எதிர்வரும் 15-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ். மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

மரதன் ஓட்டப்போட்டி, ஆண்கள், பெண்களுக்கான சைக்கிள் ஓட்டப்போட்டி உதைபந்தாட்டப் போட்டி ஆகிய போட்டிகளும் கலை, கலாசாரப் போட்டிகளும் அன்று முழு நாளும் நடைபெறவுள்ளதாக உதவி அரசாங்க அதிபர் திரு. சு. சபாபதிப்பிள்ளை அறிவித்துள்ளார்.

இவ்விழாவில் முதலுதவிச் சேவைகளை வழங்குமாறு சென். ஜோன் அம்புலன்ஸ் முதலுதவிப் படையின் வடமாகாண ஆணையாளர் டாக்டர் சுகந்தன் இன்னுசித்தம்பிக்கு உதவி அரசாங்க அதிபர் விடுத்த வேண்டுகோளை அடுத்து முதலுதவிச் சேவைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இந்த முதலுதவிச் சேவைகளுக்குப் பொறுப்பாக யாழ். டொறுப்பாளர் திரு. எஸ். செல்வரஞ்சன் கடமையாற்றுவார். (72)

மோட்டார் சைக்கிள் வித்துக்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் நேற்று நடைபெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் ஒருபெண் படுகாயமடைந்தார்.

கொக்குவிலைச் சேர்ந்த கருணதேவி விஜயராசா (வயது 50) என்ற பெண்ணே மோட்டார் சைக்கிளின் பின்னால் இருந்துவந்து படுகாயமடைந்தவராவார்.

★ ★ ★

யாழ்ப்பாணம் வெலிங்டன் சந்தியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - மினி பஸ் விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்தார்.

கொட்டடி மீனாட்சியம்மன் கோவிலடியைச் சேர்ந்தவரும், மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவருமான கந்தையா நடராசா (வயது 57) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

படுகாயமடைந்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56)

மாணவர் மன்ற வெளியீடு

(பண்டத்தரிப்பு)

யாழ். லங்கா ஆயுர் வேத வைத்தியக்கல்லூரி மாணவர் மன்றம் 'அதிவிடயம்' என்னும் பெயரில் கையெழுத்துப் பத்திரிகையொன்றை மாதம் தோறும் வெளியிடுவதென்று தீர்மானித்துள்ளது. முதல் பிரதி இம்மாதம் வெளியிடப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (72)

பயிற்சி வகுப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ். மாவட்ட சிக்கன சேமிப்பு கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜ மகளிர் குழு யுவதிகளுக்கான இலவச பயிற்சி வகுப்புகள் நடாத்தி வருகின்றது.

கேக் தயாரித்தல், ஐஸ்சிங், தலையலங்காரம், கைப்பணி, மனையியல், போன்றபல்வேறு பயிற்சிகள் தற்போது மகளிர் குழுவில் யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் நடைபெற்று வருகின்றது. (72)

கொத்தணி மெய்வல்லுநர் போட்டி

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு கொத்தணி மட்டத்தில் பதினைந்து பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் செ. அமிர்தராஜ், து. இரத்தினேஸ்வரி, சி. மருதலிங்கம், இ. மாலினி ஆகியோர் வெற்றிக் கிண்ணத்தைப் பெற்றுக் கொண்டனர். இந்நால்வரும் புங்குடுதீவு ஸ்ரீ சண்முகநாத வித்தியாலயத்தைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

வேலணை உதவிக் கல்விப் பணிப்பாளரின் பாரியார் திருமதி புலேந்திரன் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசில்களை வழங்கினார். (135-க)

'நெடுந்தீவு அபிவிருத்திக்கு முடிந்தளவு உதவுவோம்'

(நெடுந்தீவு)

"நெடுந்தீவு மக்களின் கஷ்டத்தை இங்கு வந்து பார்வையிட்டதில் இருந்து நேரில்அறியக்கூடியதாகவுள்ளது. இவ்வூருக்கு எவ்வாறுன உதவிகளைச் செய்யலாமென நான் ஆலோசிப்பேன்."

இவ்வாறு சர்வோதய செஞ்சிலுவைச் சங்கத்தின் சுவீடன் பிரதிநிதி திரு. மெயாசின் ஜீன்மரி நெடுந்தீவுக்கு செஞ்சிலுவைச் சங்கச் சார்பாக நேற்றுமுன் தினம் மேற்கொண்ட விஜயத்தின்போது தெரிவித்தார்.

நெடுந்தீவு செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் திரு. நா. கணபதிப்பிள்ளை மற்றும் சங்கப் பிரமுகர்களும் பொது ஸ்தாபனங்களும் இணைந்து திரு. மெயாசின் ஜீன்மரியையும் அவருடன் வந்த சுவிச்சலாந்து செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதி செல்வி பத்தியாஸ் பியரெத்தி, திரு. திருமதி மியூலிபக் ஜீன்லக் ஆகியோரை விசேட படகு ஒன்றின்மூலம் நெடுந்தீவுக்கு வருகைதந்த வேளை துறைமுகத்தில்வைத்து வரவேற்றார்கள்.

குழுவினர் நெடுந்தீவின் பல பகுதிகளுக்கும் சென்று பார்வையிட்டனர். திரு. மெயாசின்ஜீன்மாரி, தீவின் அபிவிருத்தி ரீதியாக முடிந்த அளவு உதவிகளைச் செய்து தர முயலுவதாகவும் உறுதியளித்தார். (133)

நியமனம்

(பண்டத்தரிப்பு)

சங்கானை அரசினர் வைத்தியசாலைக்கு முதற்தடவையாக தாதி ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளார். கிளிநொச்சி அரசினர் வைத்தியசாலையில் தாதியாகக் கடமையாற்றிய திருமதி ஏ. சி. ஏ. யோகராசா என்பவரே கடந்த முதலாம் திகதி தொடக்கம் இவ்வைத்தியசாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (72)

"கூட்டுறவு சங்கங்கள் பாண் உற்பத்தியில் ஈடுபடவேண்டும்"

[யாழ்ப்பாணம்]

"உலக அரங்கில் சோசலிஸ சித்தாந்தம் தோல்வியுற்றது போல, கூட்டுறவுச் சித்தாந்தமும் தோல்வியை தழுவிக் கொண்டது. நல்ல நோக்கத்துக்காக அமைக்கப்பட்ட கூட்டுறவில் ஊழல்மிகவும் மலிந்து விட்டது."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அரசியல் பொறுப்பாளர் திரு. ஸ்ரான்லி டொமினிக் யாழ். மனோகரா தியேட்டரில் நடைபெற்ற கூட்டுறவாளர் கருத்தரங்கில் தெரிவித்தார்.

அவர்மேலும் பேசுகையில் கூறியதாவது: கூட்டுறவுச் சங்கங்கள் சிறுகைத்தொழில் உற்பத்தியில் ஈடுபட்டால் எத்தனையோபேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கலாம். நுகர்வோருக்கு குறைந்த விலைகளில் பொருட்களை கொடுத்து சிறந்த சேவைகளை ஆற்றலாம். சவர்க்காரம், சாம்பிராணி முதலியவற்றைச் செய்து மற்றைய கூட்டுறவுச் சங்கங்களுக்கு விநியோகம் செய்து, பரந்துபட்டுவாழும் நுகர்வோரை விலைவாசி உயர்வில் இருந்து மீட்டுக்கொள்ளலாம்"

"தொடர்ந்து கூட்டுறவுத் தாபனம் நட்டத்துக்குரிய ஸ்தாபனமாக இருப்பது வேதனைக்குரிய சம்பவமாகும்; அடிக்கடி சோர்வுகளைக் காட்டுகிறீர்கள். நீங்கள் தூய்மையாக நடந்து, மக்களுக்கு கூட்டுறவின் மேல் நம்பிக்கையை ஏற்படுத்துங்கள்"

தனியார் பேக்கரிகள் பாண் போடுவதில் பல குறுகிய வழிகளைக் கையாண்டு லாபம் சம்பாதிக்கிறார்கள்; இவர்களுக்கு போட்டியாக கூட்டுறவுச் சங்கங்கள் பாண் உற்பத்தியில் ஈடுபடவேண்டும்.

"அரிசி உற்பத்தி செய்யும் 'மில்' களை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்த வேண்டும். இதனால் நுகர்வோருக்கு அரிசியை தரமாக, லாபமாகக் கொடுக்கலாம்."

"அரசாங்கம்வழங்கும் நிவாரணங்களுக்கு இந்த கூட்டுறவுச் சங்கங்கள். நுகர்வோருக்கும் இழைக்கும் அநீதிகள் ஏராளம். இலவசம் என்பதற்காக மிகவும் சாப்பிடக்கூடாத அரிசிகளை விநியோகம் செய்திருப்பதை நாங்கள் கண்டிருக்கிறோம். கூட்டுறவுச்சங்கங்கள் இப்படிச் சேவை மனப்பான்மையைவிட்டு, லாப மனப்பான்மையைக் கொண்டுஇயங்குவது வருத்தத்துக்குரியது. இந்த விடயத்தில் மிகக்கடுமையாக இருப்போம். முத்திரைகளுக்கு விலைகூடவுள்ளபொருட்களை விநியோகம் செய்வதை நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது."

"கூட்டுறவுச் சங்கத்துக்கு திறமையானவர்கள்தான் தேவை என்றில்லை. நேர்மையானவர்கள்தான் தேவை. இந்த விடயத்தில் கூட்டுறவுத் திணைக்களம் எடுக்கும் எந்த நடவடிக்கைக்கும் நாங்கள் பூரண ஆதரவு வழங்குவோம்.

எமது மக்கள் இலங்கைஇந்திய இரண்டு அரசுகளுக்கும் எதிராகப் போராடியதால் வீடிழந்து, பொருளிழந்து,உயிழப்புக்கள் இழந்து இருக்கிறார்கள். இந்த மக்களுக்கு உதவ நல்லெண்ணத்தோடு கூட்டுறவுச் சங்கங்கள் பணியாற்ற வேண்டும்." (152)

— டொமினிக்

'பாணின் நிறையும் விலையும் சரியாக இருக்க வேண்டும்'

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் உள்ள அனைத்து பேக்கரிகளும் சங்கத்தில் பதிவு செய்யப்பட வேண்டும். பதிவு செய்யப்படாத பேக்கரிகளில் பாண் போடுவதை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

யாழ். மாவட்டத்தில் உள்ள பேக்கரிக்காரர்கள் சங்கத்தினர் குருநகர் யாகப்பர் ஆலய வளவில் உள்ள பாலர் பாடசாலைக் கட்டடத்தில் ஒன்று கூடி. இவ்வாறு முடிவுசெய்துள்ளனர்.

முந்நூற்றி ஐம்பது கிராமுக்கு குறைவாக பாண் எந்த பேக்கரிகளிலிருந்தும் விநியோகம் செய்யக்கூடாது என்றும் விலையும் 4 ரூபா 90 சதமாக இருக்க வேண்டும் என்றும்தீர்மானிக்கப்பட்டது.

ஒருசில பேக்கரிக்காரர்களால் அநேக பேக்கரிக்காரர்கள் அவமானப்பட வேண்டியுள்ளதாகவும் மக்கள் மத்தியில் அவப்பெயர் உண்டாவதைத் தடுத்துநிறுத்த வேண்டும் என்ற கருத்துப்பட கருத்துரைகள் வழங்கப்பட்டன. (152)

யாருடையது?

[யாழ்ப்பாணம்]

கூட்டுறவு கிராமிய வங்கி சேமிப்புக் கணக்கு புத்தகமொன்று யாழ். நகரப்பகுதியில் யாழ்ப்பாணம் சோனகதெருவைச் சேர்ந்த எம். ஏ. எம். ரியாஸ் என்பவரால் கண்டெடுக்கப்பட்டு ஈழநாடு காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர்தகுந்த அத்தாட்சிகாட்டி பெற்றுக கொள்ளலாம். [153]

போராளிகள்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

டாக்டர் வை. யோகேஸ்வரன் தலைமையில் இக்கூட்டம் நடைபெற்றது.

கொத்தணி அதிபர் இரா. சின்னத்தம்பி, அதிபர் நா. சங்கரப்பிள்ளை, அதிபர் சு. நடராசலிங்கம், பிராந்திய கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு. ஜி. கேதீஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர். (133)

மக்கள் நிலையை

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

பொருளாதார நிலைகளைப் பூரணமாக அறிந்து வைத்துக்கொள்ள வேண்டும். அவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் சேவைகளை நேர்மையாகவும் கிடைக்கப் பாடுபட வேண்டும்.

மக்களுக்கு விளங்காத விடயங்களை விளங்க வைக்கும் ஆசிரியனுகவும்வும் கிராம சேவையாளர் செயற்பட வேண்டும். மக்களிடமிருந்து பயனை எதிர்பாராது சேவை செய்தால் அவர்கள் கிராம சேவையாளர் மீது நம்பிக்கை வைப்பர். தமது தேவைகளை மேலதிகாரிகளுக்கு எடுத்துச் சொல்லும் தொடர்பு சாதனமாக மக்கள் மதிப்பர்.

எனவே, மக்கள் நிலைமை உணர்ந்து உண்மையாகவும், நீதியாகவும் கிராமசேவையாளர் செயற்பட்டால் மக்களே இவர்களைப் பாராட்டுவதோடு நில்லாது கிராம சேவையாளர்களின் நியாயமான குறைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பர்.

— சின்னவன்

சுன்னாகம்.

90-ம் நாள் நினைவஞ்சலி

அரும்பாய்: 26 - 09 - 1963

வித்தாய்: 11 - 01 - 1990

மேஜர் சோதியா

(மைக்கல் மரி அமலோற்பவ வசந்தி - கரவெட்டி)

தாண்டு போயிருந்த
தமிழனி உரிமைகளை
தோண்டி எடுக்க
துப்பாக்கி எடுத்தவளே...!

அதிகாலை ஒன்றிற்காய்
அஸ்தமித்த வேளையில்
உலகத்தின் உள்ளத்தில்
உதயமாகி விட்டாய்

சோதியா...
சரித்திரத்தின் பிரசவிப்பில்
சாய்ந்து போன கோபுரம்
சரிந்துகிடந்த சந்ததியை
நிமிரச் செய்த
நெம்பு கோல்

சரித்திரத்தில் உன்சாவு
சகிக்க முடியாது தான்
ஆனலும்
சமாளித்துக் கொண்டோம்

இறப்புகள் தொடர்ந்து
இதயம் வருந்தினலும்
இலக்கை நோக்கியே
கால்கள் விரையும்
கரங்கள் உயரும்.

(சி 3740)

- விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி.

யாழ். செயலகத்தின் மூலம்

இதுவரை 1500 வாகன வரி அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன

(யாழ்ப்பாணம்)

யாழ் செயலகத்தின் மூலம் 1500 மோட்டார் வாகனவரி அனுமதிப்பத்திரங்கள் இது வரை வழங்கப்பட்டுள்ளன.

அண்மைக்கால அசம்பாவித நடவடிக்கைகளால் பலர் இவற்றை பெறமுடியாதநிலை யிலிருந்தது குறிப்பிடதக்கது.

மோட்டார்வாகனங்களுக்கு வாகனவரி அனுமதிப்பத்திரம் பெறவிரும்பும் வாகனச் சொந்தக்காரர் யாழ். செயலகத்திலுள்ள இறைவரி பகுதியில் தாம் செலுத்த வேண்டிய பணம் பற்றிய விபரங்கள் பெற்று யாழ். ஆஸ்பத்திரி வீதி இலங்கை வங்கி கிளையில் அதற்கான பணத்தை செலுத்திஅதன்பற்றுச்சீட்டை இறைவரி பகுதியில் செலுத்த வேண்டும் இதனையடுத்து அவருக்கு வாகனவரி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுகிறது. (153)

மக்கள் வங்கியின் கைவிசேஷ நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் இயங்கும் 16 மக்கள் வங்கிக்கிளைகளிலும் இரமாதம் 14-ம் திகதி சனிக்கிழமை காலை 9-00 மணி தொடக்கம் நண்பகல் 12-00 மணிவரை சித்திரை வருடப் பிறப்பு கைவிசேஷ நிகழ்ச்சி இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் வங்கியில் வைப்புச்செய்யும் வாடிக்கையாளர்களுக்கு வைபவரீதியாக கிளை முகாமையாளரினால் கைவிசேஷம் வழங்கப்படவுள்ளது.

ஈஸ்டர் திருநாளை முன்னிட்டு ரூபவாஹினியில் தமிழ் நிகழ்ச்சி

(கொழும்பு)

ஈஸ்டர் திருநாளை முன்னிட்டு ரூபவாஹினியில் இரண்டு விசேட தமிழ்க் கத்தோலிக்க நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகவுள்ளன.

யாழ். திருமறைக் கலாமன்றத்தினரின் இந்த இரண்டு நிகழ்ச்சிகளும் 12ம்திகதி பெரிய வியாழக்கிழமையும், 13ம்திகதி பெரிய வெள்ளிக்கிழமையும் ஒளிபரப்பப்படவுள்ளன.

12ம் திகதி மாலை 6-55க்கு இசை நிகழ்ச்சி ஒளிபரப்பப்படும். இதனை திரு எஸ்.விஸ்வநாதன் தயாரித்துள்ளார்.

'களங்கம்' என்ற நாடகம் 13ம் திகதி மாலை 6-55க்கு ஒளிபரப்பாகவுள்ளது. இதனைத் திரு. எம். வரதராஜன் நெறிப்படுத்தியுள்ளார்.

'ஈழநாடு'வுக்கு விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மருத்துவபீட மாணவர்கள் ஈழநாடு காரியாலயத்திற்கு வருகைதந்து பத்திரிகை உருவாகும் முறை, பத்திரிகையாளருக்கு ஏற்படும் உளரீதியான பாதிப்புகள், அச்சுக் கோப்பாளர்களுக்கு ஈயத்தினால் ஏற்படும் பாதிப்பு ஆகியவைபற்றிக் கருத்துக் கேட்டு அறிந்து சென்றுள்ளனர்.

டாக்டர் வி. என். சிவராசா தலைமையில் டாக்டர் எஸ். மனோகரனும், பத்தொன்பது மாணவர்களும் இந்தக்குழுவில் இடம்பெற்றிருந்தனர். (152)

எதிர்க்கட்சிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

எனவே அவருடன் கலந்து பேசி, நாளைய தினம் விபரங்களைச் சட்டப்பேரவையில் அறிவிப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

நமது கடல் எல்லை சரியாக வகுக்கப்படவில்லையா அல்லது எமது கடற்றொழிலாளர்களுக்கு அந்த எல்லை தெரியவில்லையா என்பதனைப் பார்ப்பதோடு, புதுடில்லி செல்லும் வருவாய்த்துறை அமைச்சர் திரு நாஞ்சில் மனோகரன், இந்தச் சம்பவம் தொடர்பாகச் சம்பந்தப்பட்ட அமைச்சருடன் பேச்சுவார்த்தை நடத்துவார் என்றும் திரு கருணநிதி தெரிவித்தார். (து)

பிரேமா

(1ம பக்கத் தொடர்ச்சி)

கொண்ட பேச்சுக்களின் போது ஆராய்ந்ததாகவும் கூறப்படுகிறது.

அமைச்சர் ஹமீத் மேற்கொள்ளும் ஏற்பாடுகளை அடுத்து ஜனாதிபதி திரு. பிரேமதாஸா திரு. பிரபாகரனை யாழ்ப்பாணத்தில் சந்திப்பாரென்றும் கொழும்பு வட்டாரங்களில் நேற்று தெரிவிக்கப்பட்டது. (சி)

இப்பதான்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

ளுக்குச் சுகம். ரோட்டுக் கண் காணிக்கிற தம்பிமார் மஞ்சள் உடுப்பை போட வெட்கப்படுகிறார்கள் போல இருக்கு... ஒரு கௌரவமான யூனிபோம் கொடுத்தால் அவர்கள் விரும்புவாங்கள் என்டு நினைக்கிறன்"

சந்திப்பு: மணிசேகரன்

காஷ்மீரில் கடத்தப்பட்டவர்களில் ஒருவர் கொலை!

(ஸ்ரீநகர்)

ஜம்மு - காஷ்மீரில் தீவிரவாதிகளினால்கடத்திச்செல்லப்பட்ட மூவரில் ஒருவரான அரசுக்குச் சொந்தமான கடிகாரத் தொழிற்சாலை நிர்வாக அதிபர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இவருடன் கடத்தப்பட்ட காஷ்மீர் பல்கலைக்கழகத் துணைவேந்தரையும், அவரது செயலாளரையும்பற்றி இதுவரையும் எவ்விதத் தகவலுமில்லை.

சிறையிலுள்ள தமது மூன்று சகாக்களை விடுதலை செய்தால் மட்டுமே இவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று தீவிரவாதிகள் நிபந்தனை ஒன்றை விதித்துள்ளனர்.

(முன் வந்த செய்தி, 3-ம் பக்கத்தில்) (து)

நீர்ப்பாசனத்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிரந்தர முகவரியை மேற்படிவைப்புக் கணக்குப் பகுதிக்குத் தெரிவிக்காமலும், தமது வைப்புப் பணத்தைக் கோராமலும் இருத்தல்.

ஊழியர்கள் சேவையில் இருக்கும் போது இறந்து விட்டால் அவ்வூழியர்களின் பணக் கொடைக் கொடுப்பனவுகளின் ஒருபகுதி அவ்வூழியர்களின் பராயமடையாத பிள்ளைகளின் பேரில் வைப்பிலிடப்படுகின்றமையால், அவர்கள் 21 வயதை அடைந்த பின்பு அவற்றை மீளப்பெறக்கூடியதாக இருந்தும் அவர்கள் வைப்புப் பணத்தைக் கோராமல் இருப்பதுடன் அவர்களது தற்போதைய நிரந்தர விலாசத்தை அறிய முடியாமல் இருக்கிறது.

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் வாழும் நீர்ப்பாசன திணைக்களத்தைச் சார்ந்த ஓய்வுபெற்ற ஊழியர்கள் அல்லது இறந்த ஊழியர்களின் உறவினர்கள் இத்தகவல்களைக் கவனத்தில் எடுத்து இதுவரை தமக்கு உரித்தான ஏதாவது வைப்புப் பணத்தை பெறவில்லையாயின் தமது பூரண தகவல்களை தமக்கு அனுப்பி வைக்குமாறு நீர்ப்பாசனத்திணைக்கள பிரதிப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

பிரதிப்பணிப்பாளர் (நிதி) நீர்ப்பாசனத் திணைக்களம், தபாற்பெட்டி இல! 1187, கொழும்பு 7, என்னும் முகவரியில் இது தொடர்பாக தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

பொதுக்கூட்டம்

(பண்டத்தரிப்பு)

வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி சேவை தொழில் நுட்ப உத்தியோகத்தர் தொழிற் சங்கத்தை மீண்டும் இயங்கச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இதற்கான பொதுக் கூட்டத்தை மே மாதம் 20ம் திகதி வலி தெற்கு பிரதேச சபையின் உடுவில் உப அலுவலக மண்டபத்தில் நடாத்துவதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

மோட்டார்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

துடன் தொடர்புகொண்டும் ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்று தெரியவருகிறது.

தமிழ்பேசும் அலுவலர்களைத் தலைமைத் திணைக்களம் இதுவரை எடுக்கவில்லை. இதனால் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல், சாரதி அனுமதிப்பத்திரங்கள் வழங்கல் போன்ற வேலைகள் இதனால் இங்கே நடைபெறுவதில்லை எனவும் தெரியவருகிறது. (153)

இன்று

(யாழ்ப்பாணம்)

தமிழ் - சிங்களப் புத்தாண்டுத் தினத்தை முன்னிட்டு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு மட்டத்தில் திரு எஸ். எஸ். சீவரத்தினம் தலைமையில் நடைபெறும் விளையாட்டு விழா இன்று(11-4-90) ஊர்காவற்றுறை பட்டினசபை திறந்த வெளியரங்கில் நடைபெறவிருக்கிறது. (153)

விபத்துக்கள்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகத்தில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-சைகிள் விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்தார்.

சுன்னாகம் கந்தரோடையைச் சேர்ந்த நடராசா ஸ்ரீஜெயராசா (வயது-30) என்பவரே சைக்கிளில் சென்றபோது குறுக்கே வந்த மோட்டார் சைக்கிளுடன் அடிபட்டுப் படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

0 0 0

சித்தன்கேணியில் நேற்று இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்தார்.

விபத்தில் சித்தன்கேணியைச் சேர்ந்த பி. துரைராசசிங்கம் (வயது-40) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

0 0 0

வேலணையில் நேற்று இடம்மோட்டார் சைக்கிள், விபத்தொன்றில் ஒருவர் படுகாயமடைந்தார்.

இவ்விபத்தில் வேலணை இண்டாம் வட்டாரத்தைச் சேர்ந்த சோமசுந்தரம் மார்க்கண்டு (வயது-42) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

அரச மரக்கூட்டுத்தாபன

யாழ். மரக்காலைக்கு 'கெம்பஸ்' மரங்கள் இறக்குமதி

[யாழ்ப்பாணம்]

வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 'கெம்பஸ்' என்றழைக்கப்படும் மரங்கள் யாழ். வந்து சேர்ந்துள்ளன.

500 கனஅடி அடங்கிய இந்த ரக மரங்கள் வட பிராந்திய அரச மரக் கூட்டுத்தாபன யாழ். மரக்காலைக்கு வந்துள்ளன.

இந்த மரங்கள் பதம்செய்யப்பட்ட மரங்களாகும். இலகுவில் பழுதடையாத மரங்கள் என்றும் கூறப்படுகிறது. இம்மரங்கள் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சினூல் அரசினர் மரக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டுள்ளன.

இந்த மரங்கள் வீட்டுக் கட்டிடப் பாவனைக்கு உபயோகிக்கக் கூடியவையாகும். இது முதற்கட்டமாக வந்துள்ளது. தொடர்ந்து வட பிரதேசத்துக்கு இம்மரங்கள் அனுப்பி வைக்கப்படவிருக்கின்றன.

வடபிராந்திய மரக் கூட்டுத்தாபனத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் யாழ்ப்பாணம், கொக்குவில், நல்லூர், சுன்னாகம், சங்கானை, வட்டுக்கோட்டை, காங்கேசன்துறை, வல்வெட்டித்துறை ஆகிய எட்டு இடங்களிலும் விறகு காலிகள் உள்ளது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் மானிப்பாய் ப. நோ.கூ.சங்கம் அச்சுவேலி, ப. நோ. கூ. சங்கம், பருத்தித்துறை ப. நோ. கூ. சங்கம், வண்ணார்பண்ணை ப. நோ.கூ. சங்கம் ஆகிய ஐந்து அங்கீகரிக்கப்பட்ட முகவர் நிலையங்கள் ஊடாகவும் விறகு காலிகள் இயங்குகின்றன. [153]

யாழ். செயலகத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பங்கள் ஏற்றுக்கொள்வது இவ்வலுவலகத்தினால் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. (153)

வடக்கு-கிழக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட ஒழுங்குடன் தொடர்புடைய பிரச்சனைகள் விரிவாக நேற்று ஆராயப்பட்டன.

விடுதலைப் புலிகள் அமைப்புத் தூதுக்குழுவில் திரு. கோ. மகேந்திரராசா (மாத்தயா), கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திரு. யோகரத்தினம் யோகி, கிழக்கு மாகாணப் பொறுப்பாளர் திரு. எஸ்.கரிகாலன், அம்பாறை மாவட்ட இராணுவப் பொறுப்பாளர் திரு. கஸ்ரோ, திருமலை மாவட்டப் பொறுப்பாளர் திரு. ரூபன் ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

அரசாங்க தரப்பில் வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநர் லெப். ஜெனரல் நளின் செனவிரத்ன, பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஜெனரல் சிறில் ரணதுங்கா, ஏயார் சீவ் மார்ஷல் எ. டபிள்யு பெர்ணாண்டோ, இராணுவக் கமாண்டர் லெப் கேர்னல் எஸ். ரணசிங்க, கடற்படைத் தளபதி வைஸ்அட்மிரல் எஸ். ஜே. டி. சில்வா, ஏயார் மார்ஷல் எம். எம். ஏ. பி. குணவர்த்தன, பொலிஸ் மா அதிபர் ஏணஸ்ட் பெரேரா ஆகியோர் இடம் பெற்றிருந்தனர்.

இதேவேளை விடுதலைப் புலிகள் தூதுக்குழுவினர் நேற்று முன்தினமிரவு அமைச்சர் ஹமீத்தைச் சந்தித்து நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தினர்கள்.

நேற்றிரவு ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாசாவை இக்குழுவினர் சந்திப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. (து)

சிறிலங்காவுடன்

1(ம் பக்கத் தொடர்ச்சி)

யாற்றுகையில், விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வலிகாமம் பொறுப்பாளர் திரு. சி. ஆஞ்சநேயர் இவ்வாறு கூறினர்.

திருமதி சாவித்திரி அத்துவிதானந்தன் தலைமையில் நடந்த உண்ணாவிரதக் கூட்டம் நடைபெற்றது. இவரது மகள் சபரி, 1987 அக்டோபர்மோதலில் வீரமரணம் அடைந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.ஆஞ்சநேயர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:

"எமது சுதந்திர விடுதலைப் போராட்டம் பலம்பெற்று, சர்வதேச ரீதியில் முதன்மை அடைந்துள்ளது. இதற்குக் காரணம், அன்னை பூபதி, திலீபன் போன்றவர்களின் உறுதிமிக்க, சாதனை படைத்த தியாக மரணங்களாகும். அத்துடன் எம் முன்னே மரணித்த போராளிகளின் அர்ப்பணிப்புக்களாலும், எமது தலைமையின் உறுதியினாலும், தீர்க்க தரிசனம் மிக்க ராஜதந்திரப் போக்கினாலும் எமது போராட்டம் வளர்ச்சி அடைந்து செல்கிறது.

"சர்வதேச அரங்கு, எமது விடுதலைப் போராட்டத்தின் தன்மையைப் புரிந்துகொண்டுள்ளது. எமது மக்களும். எமது விடுதலைப் போராட்டத்தைத் தெளிவாகப் புரிந்து கொண்டு ஏற்றுக்கொண்டுள்ளார்கள். ஆனாலும் முழுமையாக ஒருசாரார், விடுதலைப் போராட்டத்திற்குத் தமது பங்களிப்பை வழங்குவதில்லை.

"எமது பலத்தின் காரணமாகச் சிறிலங்கா அரசுடனான பேச்சுவார்த்தையின் மூலம் ஏற்பட்டுள்ள சுமுகமான சூழலில், மக்கள் தங்களுடைய சுயநலத்தினாலும், அர்த்தமற்ற அச்சத்தினாலும் பூரண பங்களிப்பை வழங்குவதில்லை. இது அர்த்தமற்றது.

'இன்றைய சூழ்நிலையில் தமிழீழ மக்கள் ஒவ்வொருவரும் விடுதலைப் போராட்டத்தில் பங்களிபபு செய்வது தவிர்க்கமுடியாததும் இன்றியமையாததும் ஆகும்'.

'எனவே நாம் ஒவ்வொருவரும் விடுதலைப் போராட்டத்தில் உணர்வு பூர்வமாக பங்கேற்பதன்மூலம் ஒரு ஆரோக்கியமான சுதந்திர தமிழீழத்தை வென்றெடுக்க முடியும். இதன் மூலம் தான் அன்னை பூபதிக்கும் ஏனைய தியாகிகளுக்கும் நாம் உளபூர்வமான அஞ்சலிகளை செலுத்த முடியும் என்றார்.

உண்ணாவிரதத்தை தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர் திரு. சி. கா.சதாசிவம் பழரசம் வழங்கி முடித்துவைத்தார்.

உண்ணாவிரதக் கூட்டத்தில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி அரியாலைப் பொறுப்பாளர் திரு. க. பகீன், வலிகாமம் பிரதேச மகளிர்பிரிவு பொறுப்பாளர் சித்ரா, யாழ். மாவட்ட மகளிர் பிரிவு பொறுப்பாளர் மாலினி, விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர் செல்வநாயகம் ஆகியோரும் உரையாற்றினர்கள்.

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு சித்திரை மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.